**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 19/2024**

**Prosecution Witness 1 (LW 1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சுடலை வேல்முருகையா | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.08.2024.

( எதிரிகள் ஆஜர்)

(சாட்சி அழைக்கப்பட்டு அவருடைய மருத்துவ கட்டுப்பாட்டு துறை அடையாள அட்டை மூலம் மற்றும் வாதி மூலம் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

முதல் விசாரணை:

1) நான் தற்சமயம் மதுரை மாவட்டம் மருந்து கட்டுப்பாட்டு துறை, நாகமலைபுதுக்கோட்டையில் உதவி இயக்குநராக மருந்து கட்டுப்பாட்டு இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.02.2010 முதல் 01.02.2017 வரை தேனி சரக மருந்து ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். தமிழ்நாடு அஞ்சலக துறை பின் எண் : 625020 , உறங்கான்பட்டி , மகியா இன்டஸ்டரியல் எஸ்டேட், எண் – 89, 90, டெக்னோமெட் நிறுவனத்தின் உரிமையாளரும் , உற்பத்தி வேதியியாளருமான எஸ்.ரகுநாதன் (1வது எதிரி) மதுரை 625017, கலை நகர் விரிவாக்கம் , பல்லவி நகர், பிளாட் எண் – 28, ஜெய் ஜவான் இல்லம், முதல் தளத்தில் , நாக் லேப்லெட்டரி உரிமையாளர் பிரித்விராஜ் ( 2வது எதிரி) மற்றும் இந்த வழக்கில் கண்ட எதிரிகள் மீது இந்த தனிப்புகார்

தாக்கல் செய்யபட்டுள்ளது.

2) நான் தான் புகார்தாரர். 22.10.2013 ல் 3 ம் எதிரியின் நிறுவனமான வைஷ்ணவி பார்மா ஏஜென்ஸியில் வழக்கமான பணி சம்பந்தமாக ஆய்வு மேற்கொண்டேன். ஆய்வின் போது ஒரு மருந்து சம்பந்தமாக அதன் இருப்பு விபரம், கொள்முதல் விபரம் மற்றும் விற்பனை விபரம் , உரிமை விபரம் , அந்த நிறுவனத்திற்கான விதி 51 மருந்து விதி 1945 ன் பிரகாரம் ஆய்வு செய்தேன்.
அந்த ஆய்வின் போது அரசு பகுப்பாய்விற்காக 1 வது எதிரி நிறுவனத்தின் தயாரிப்பான Naccold syrup தொகுதி எண் – NP007 , தயாரித்த காலம் ஜீலை 2013 ன் மருந்தினை ஆய்வு செய்தேன். அதன் நிர்ணயித்த காலாவதி காலம் ஜீன் 2016 ஆகும். மேற்படி மருந்தினை 4X2X60 ml தர பகுப்பாய்விற்காக அதன் பற்று சீட்டு எண் – SA003376 நாள் 22.10.2013, விலை ரூபாய் .286 க்கு கிரடிட் மூலம் என்னுடைய பதவியின் பெயரில் பெற்றேன்.

3) மேற்படி மாதிரி மருந்தினை 3 வது எதிரியின் முன்னிலையில் ஒவ்வொரு பாட்டிலையும் தனித்தனியாக நூலினால் கட்டி தேனி சரக மருந்து ஆய்வாளர் மருந்து மாதிரிக்கு SS–66–T–13 என்று நம்பர் இட்டார்.
இரு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 19.08.2024 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN
Digitally signed by S GOPINATHAN
Date: 2024.08.20 09:38:18 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
19.08.2024